செ.வெ.எண் : 23/ஜூலை நாள் : 21.07.2020

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாற்றுத்திறனாளிகளுக்கான சிறுதொழில்கள் மற்றும் பெட்டிக்கடைகள் அமைக்க கடனுதவிக்கு விண்ணப்பிக்கலாம்
## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுதொழில்கள் மற்றும் பெட்டிக்கடைகள் திட்டத்தில் வங்கிக்கடன் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுதொழில்கள் மற்றும் பெட்டிக்கடைகள் திட்டத்தின் கீழ் 2020-21-ம் நிதியாண்டிற்கு ரூ.10,0000/-(பத்து இலட்சம்) நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் வங்கிக்கடன் பெறும் பயனாளிகளுக்கு அரசு மானியமாக ரூ.25,000/- வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தில் ஏற்கனவே பயன்பெற்றிருக்கக் கூடாது.

எனவே, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்றுள்ள சுயதொழில் தொடங்க விருப்பமுள்ளவர்கள் மற்றும் சுயதொழில்புரியும் 18 வயது முதல் 50 வயது வரை உள்ள மாற்றுத்திறனாளிகள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வங்கிக் கணக்கு புத்தகம், கடை வைத்ததற்கான ரசீது, கொள்முதல் ஆணை ஆகிய ஆவணங்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கிவரும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று உரிய சான்றுகளுடன் விண்ணப்பித்து பயனடையலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**